**கவனிக்க -** 26.09.2025 ஆந் திகதிய 2456 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வரத்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2457 - 2025 ඔක්තෝබර් මස 03 වැනි සිකුරාදා - 2025.10.03

2457 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 764 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 771 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”

**எஸ். டீ. பாண்டிகோறாள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

763 – B82726 - 5403 (2025/10)

# பதவிகள் வெற்றிடம்

## தென் மாகாண விளையாட்டுத் திணைக்களம்

## விளையாட்டு உத்தியோகத்தர் (முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பத் தொகுதி 02 சேவைக் குழு தரம் III) பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

தென் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 17**

**01. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள், தென் மாகாண விளையாட்டுத் திணைக்களம் மற்றும் வைத்தியப் பிரிவினால் நடாத்தப்படுகின்ற தொழில்சார் பதவிக்கு உட்படுத்தப்படுவதுடன், அதில் சித்தி பெற்ற விண்ணப்பதாரர்கள் தென் மாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை குழுவின் முன்னால் மதிப்பீட்டுத் தகைமை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி, அத்தகைமைகளை மதிப்பீடு செய்யும் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் ஒழுங்கு அடிப்படையில் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும். அவ் ஒவ்வொரு பரீட்சையிலும் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய விதம், இவ்வறிவித்தலின் 08 ஆம் இலக்கத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**02. தேவையான தகைமைகள் :**

(அ) கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் :

I. சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் உட்பட மேலும் இரு பாடங்களில் (02 இற்கு) திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்;

அத்துடன்

II. க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்திற்கமைய அனைத்துப் பாடங்களிலும் (பொதுச் சாதாரண தரப் பரீட்சை தவிர்ந்த) சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது பழைய பாடத்திட்டத்தில் மூன்று (03) பாடங்களில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்;

அத்துடன்

III. விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படுகின்ற தேசிய ரீதியிலான விளையாட்டு விழாவில் மாகாண மட்டத்தில் (மாவட்டங்களில்) 1வது அல்லது 2வது இடத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்;

அல்லது

தேசிய ரீதியிலான விளையாட்டு விழாவில் 1,2 அல்லது 3வது இடத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) விளையாட்டுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய கிண்ணப் போட்டியில் 1, 2 அல்லது 3வது இடத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்;

அல்லது

I. சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் உட்பட மேலும் (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

அத்துடன்

II. தெற்காசியப் போட்டி, ஆசியப் போட்டி, பொதுநலவாய சபைப் போட்டி, ஒலிம்பிக் போட்டி அல்லது உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக இலங்கையினூடாகப் பங்குபற்றி 1, 2 அல்லது 3 ஆவது இடத்திற்காகப் பதக்கம் பெற்றிருத்தல் வேண்டும்.

- மேற்குறிப்பிட்ட தகைமைகளின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருடங்களினுள் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி (NVQ) மட்டம் ஆறு (06) விளையாட்டுத் துறைக்குரிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ஒன்றைப் பெற்றுக் கொள்வது சேவையை நிரந்தரமாக்குவதற்கு கட்டாயமானதாகும். இத்தேசிய தொழிற் தேர்ச்சி (NVQ) மட்டம் ஆறு (06) விளையாட்டுத்துறைக்குரிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ஒன்றை முதல் மூன்று (03) வருடத்தினுள் பெற்றுக் கொள்ளாவிடின், உத்தியோகத்தர்களின் சேவை தகுதிகாண் கால முடிவில் நிரந்தரமாக்கப்படாததுடன், அவர்களின் சம்பள உயர்வு தற்காலிகமாக நிறுத்தப்படும். அவ்வாறு சம்பள உயர்வை தற்காலிகமாக நிறுத்துவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர் அவ்வாறு சம்பள உயர்வு தற்காலிகமாக நிறுத்தப்படும் திகதி தொடக்கம் இரண்டு (02) வருட காலத்தினுள் தேசிய தொழிற் திறமைசார் (NVQ) ஆறு (06) மட்டத்தில் விளையாட்டுத் துறைக்குரிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ஒன்றைப் பெற்றுச் சித்தியடையவில்லை எனின், அவர்களின் நியமனம் தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன், வினைத்திறனின்மையின் பேரில் தென் மாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளரினால் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

03. **அனுபவங்கள் :**

உரிய துறையில் அநுபவங்களைப் பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

04. **உடற் தகைமைகள் :**

அனைத்து விண்ணப்பதாரர்களும் தென் மாகாணத்தினுள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்யவும், பதவியின் கருமங்களை நிறைவேற்றுவதற்கும், போதியளவு உள்ளத்தாலும், உடலினாலும் மதிப்பீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

05. **ஏனைய தகைமைகள் :**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

ii. விண்ணப்பதாரர் நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்;

iii. தென் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ளவராக இருக்க வேண்டியதுடன், குறைந்தது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு கிட்டிய மூன்று (03) வருடங்கள் தொடர்ந்து நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ளவர் என கிராம அலுவலரினால் விநியோகிக்கப்படும் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

iv. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதிக்கு இல. 02 தொடக்கம் இல. 06 வரையுள்ள அனைத்து தகைமைகளும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

06. **வயதெ எல்லை :**

| | | |
|---|---|---|
| குறைந்த வயதெல்லை | : | 18 வருடங்கள் |
| கூடிய வயதெல்லை | : | 35 வருடங்கள் |

07. **சம்பள அளவு :**

2025.03.25 ஆந் திகதிய இலக்கம் 10/2025 கொண்ட அரசாங்க நிருவாக சுற்றுநிருபத்தின் அட்டவணை 1 இற்கு ஏற்ப இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவு ரூ. 50,630.00 – 10 x 630 – 11x 670 – 10x1010 – 10 x 1190 - ரூ. 86,300.00 (MT 02 – 10 – 2025) அச் சம்பளம் 2027.01.01 ஆம் திகதியிலிருந்து உரித்தாவதுடன் பதவி, நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து இச்சுற்றுநிருபத்தின் III ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சம்பளம் வழங்கப்படும்.

08. நேர்முகப் பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்ட புள்ளிகள் ஒழுங்கு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

I. தொழில்சார் பரீட்சை :

உடற் தகைமை மதிப்பீட்டிற்காக தென் மாகாண விளையாட்டுத் திணைக்களம் மற்றும் வைத்திய பிரிவினால் நடாத்தப்படும் நடைமுறைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். உடற் தகைமை பரீட்சை (மறுதாக்க வேகம், நெகிழும் தன்மை, உதரத்தின் சக்தி, இரு கைகளினதும் சக்தி, அசைவு, நின்ற நீளம் பாய்தல், வேகம் மற்றும் தாங்குதல் சக்தி ஆகிய) எட்டு (08) அம்சங்களிலும் சித்தியடைவதுடன், ஒவ்வொரு பரீட்சையிலும் குறைந்தது 30 புள்ளிகளும், அனைத்து விடயங்களுக்கும் சாதாரணமாக 40% அல்லது அதற்கு மேற்பட்ட தொகையிலும் பெற்றிருத்தல் வேண்டும்.

II. தகைமை மதிப்பீட்டுப் பரீட்சை :

| | *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்பு* | *ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு* | *தெரிவு செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படும் குறைந்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள் | 10 | ஏற்புடையதன்று |
| 02 | விளையாட்டுத் திறமைகள் | 70 | |
| 03 | விளையாட்டுப் பயிற்சி அளித்தல், நடுவராக இருத்தல் / போட்டி ஏற்பாடுகள் பற்றிய மேலதிக அநுபவங்கள் | 15 | |
| 04 | நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமைகள் | 05 | |
| | மொத்தம் | 100 | |

09. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம் :**

அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை முன்வைத்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தொழில்சார் பரீட்சை மற்றும் உடற் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களின் மூலப் பிரதிகளும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதித் தொகுதியொன்றும் முன்வைக்கப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தம்மை அறிமுகப்படுத்திக் கொள்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடையாள அட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும் :

i. ஆட் பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை ;
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

10. விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் :

(அ) சகல விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் போது திருப்பிச் செலுத்த முடியாத தொழில் முறை தேர்வுப் பரீட்சைக் கட்டணமாக 1000.00 ரூபா தொகையைச் செலுத்துதல் வேண்டும். அக்கட்டணத்தை

"செயலாளர், தென் மாகாண விளையாட்டு, கிராம அபிவிருத்தி .... அமைச்சு" எனும் பெயரில் காலி கோட்டை இலங்கை வங்கிக் கணக்கு இல. 1587434 இற்குச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பணத்தை இலங்கையின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்த முடியும்.

(ஆ) விண்ணப்பப்படிவம் 2025.11.03 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர்; "தென் மாகாண விளையாட்டு அமைச்சு, 3 ஆவது மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி" எனும் விலாசத்திற்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(இ) இவ்வறிவிப்பின் இறுதியில் காட்டப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை A4 அளவுள்ள தாளில் தயாரித்து, முதலாம் பக்கத்தில் இலக்கம் 01 தொடக்கம் 06 வரையும் இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 07 தொடக்கம் 09 வரையும் மூன்றாவது பக்கத்தில் இலக்கம் 10 முதல் 13 வரையும் நான்காவது பக்கத்தில் இலக்கம் 14 முதல் 15 வரையும் அமையக் கூடிய விதத்தில் தயார் செய்து தமது கையெழுத்தால் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "தென் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(உ) விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அரசாங்க/ கல்லூரியின் அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளர் / வழக்கறிஞர் / பிரசித்தி பெற்ற நொத்தாரிசு / முப்படை அதிகாரி உத்தியோகத்தர் அல்லது ரூபா 82,150.00 மாதாந்த சம்பளம் பெறும் அரசாங்க நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஊ) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை தமது நிறுவனத் தலைவர் மூலம் முன்வைக்க வேண்டும்.

(எ) இத்துடன் இருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு பொருத்தமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். அமைச்சுக்குக் கிடைக்க முன்னர் விண்ணப்பப்படிவம் காணாமற் போதல் அல்லது தாமதித்தல் போன்ற ஏதேனும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

11. பிழையான தகவல்களை வழங்குதல் :

உங்களால் சமர்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதேனும் தகவல்கள் உண்மையற்றவை அல்லது தவறானது என்று ஆட்சேர்ப்புக்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டால் உங்கள் அபேட்சகர் நிலை நிராகரிக்கப்படும். அவ்வாறான உண்மையற்ற அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் வெளிப்படுத்தப்பட்டால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

12. வெற்றிடங்களை நிரப்புவதும் நிரப்பப்படாததுமான உரிமை தென் மாகாண விளையாட்டு அமைச்சுக்குரியதாகும்.

கே.யூ. சந்திரலால்,
செயலாளர்,
தென் மாகாண விளையாட்டு அமைச்சு.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**தென் மாகாண விளையாட்டுத் திணைக்களம்**

தென் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள விளையாட்டு உத்தியோத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு. / திருமதி / செல்வி)
   தமிழில் :
   ……………………………………………………………………………………………………………
   ……………………………………………………………………………………………………………
   ஆங்கிலத்தில் :
   ……………………………………………………………………………………………………………
   ……………………………………………………………………………………………………………

1.1 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (தெளிவான எழுத்தில்) :
   தமிழில் :
   ……………………………………………………………………………………………………………
   ……………………………………………………………………………………………………………
   ஆங்கிலத்தில் :
   ……………………………………………………………………………………………………………
   ……………………………………………………………………………………………………………

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ……………………………………………………………………………..

3. பிறந்த திகதி : வருடம் : ……………… மாதம் : ………………. திகதி : ……………...

   3.1 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது : வருடங்கள் : ………… மாதங்கள் : ……………. நாட்கள் : …………

4. பால் (ஆண் / பெண்) (ஆண் - M , பெண் - F ) : ☐

5. விவாகமானவர் / விகாகமாகாதவர் பற்றியது : ……………………………………………………………………..

6. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்தில்) : ……………………………………………………………………………
   ……………………………………………………………………………
   ……………………………………………………………………………

7. தொலைபேசி இலக்கம் :
   நிரந்தரம் : ……………………………
   கையடக்கம் : ……………………………

8. கல்வித் தகைமைகள் :

   8.1 க.பொ.த. (உ/த) பரீட்சை பற்றிய விபரம்

   i. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் : ……………………………………………………………………
   ii. பரீட்சைச் சுட்டெண் : ……………………………………………………………………
   iii. சித்தியடைந்த பாடங்கள்

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

8.2 க.பொ.த. (சா/த) பரீட்சை பற்றிய விபரம்

i. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் : ……………………………………………………………………………

ii. பரீட்சைச் சுட்டெண் : ……………………………………………………………………………

iii. சித்தியடைந்த பாடங்கள்

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

9. விளையாட்டுக்களில் பெற்ற வெற்றிகள் :

| *வருடம்* | *விளையாட்டுப் போட்டி* | *உரிய மட்டம்* | | *விளையாட்டு* | *வெற்றி / பெற்றுக் கொண்ட இடம்* |
|---|---|---|---|---|---|
| | | *மாகாணம்* | *தேசிய* | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

10. தொழில்சார் தகைமைகள் :

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

11. நீங்கள் எப்போதாவது எந்தவொரு குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீரா?

ஆம் / இல்லை

ஆம், எனின் விபரிக்கவும்.

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரம்

i. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் : ……………………………………………………………………

ii. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் : ……………………………………………………………………

iii. செலுத்திய தொகை : ……………………………………………………………………

| |
|---|
| பற்றுச் சீட்டு கழன்று விடாதவாறு இங்கே ஒட்டவும் |

13. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இவ்வெளிப்படுத்தல் உண்மைக்குப் புறம்பானது என நிரூபிக்கப்படுமாயின், நியமிக்கப்பட முன்னர் தகுதியற்றவனாவேன் என்பதையும், நியமிக்கப்பட்ட பின்னர் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) இங்கே குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவல்களையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

………………………….                                        ………………………………
திகதி                                        விண்ணப்பதாரரின் கையொப்பம்

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்பிக்கும் ………………………………….. என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், அவர் …………… ஆந் திகதி என் முன்னிலையில் மேலே 13 ஆம் பந்தியின் கீழ் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

…………………………………….
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

திகதி : ……………………………………………………………………………………………………
உறுதிப்படுத்துபவரின் பெயர் : ……………………………………………………………………………………………
பதவி : ………………………………………………………………………………………………..
விலாசம் : ……………………………………………………………………………………………
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

15. திணைக்களத் தலைவரின் அத்தாட்சி (அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்காக மாத்திரம்)

15.1 உத்தியோகத்தரின் தனிநபர் கோவையின் பிரகாரம், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அண்மித்த ஐந்து (05) வருடங்களுக்குள் வேலை, நடத்தை, வரவு என்பன திருப்திகரமானது / திருப்திகரமற்றது.

சகல சம்பளப்படி உயர்வுகளையும் பெற்றுள்ளார் / பெறவில்லை.

ஏதேனும் ஒரு வகையில் ஒழுக்காற்று தண்டனைக்கு உட்படவில்லை / உட்பட்டுள்ளார்.

15.2 விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்படின், தற்போது வகிக்கும் பதவியிலிருந்து இவ்வுத்தியோகத்தரை விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது. விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்துகின்றேன் / உறுதிப்படுத்தவில்லை.

………………………                                        ………………………………………
திகதி                                        திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**ஊவா மகாண விவசாயத் திணைக்களம் - ஊவா மாகாண சபை**

விவசாயப் பயிற்சி பாடநெறி துறைசார் உதவியாளர் (விவசாயம்) தேசிய தொழில் தகைமை (NVQ 4) பயிற்சி பாடநெறி – 2025 ii கல்வி ஆண்டு

01. மேற்குறிப்பிட்ட பயிற்சி பாடநெறிக்கு மாணவ மாணவிகளிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் ஊவா மாகாண விவசாயப் பணிப்பாளரினால் கோரப்படுகின்றன. இப்பாடநெறியானது ஊவா மகாண விவசாயத் திணைக்களத்தின் கீழுள்ள பிபிலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

02. சிங்கள மொழி மூலம் நடைபெறும் ஒரு வருட பயிற்சிப் பாடநெறியானது 06 மாத காலம் எழுத்து செயன்முறை ரீதியானதாகவும் அத்துடன் மேலும் 06 மாத காலம் ஊவா மகாணத்தினுள் தொழில்சார் பயிற்சியையும் உள்ளடக்கியதாகும். பாடநெறியினை சிறப்பாக பூர்த்தி செய்யும் மாணவ மாணவிகளுக்கு ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தினால் சான்றிதழ் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற NVQ மட்டம் 4 சான்றிதழும் வழங்கப்படும்.

03. பாடநெறியானது விவசாயத்தினை வியாபார நோக்காக அத்துடன் இது விவசாயப் பிரிவில் தொழில் வாய்ப்பு மற்றும் சுய தொழிலை அடிப்படையாகக் கொண்டு செயற்படுபவர்களை இலக்காகக் கொண்டது. தேசிய தொழிற்தகைமை 5 மட்டத்திற்குரிய பாடநெறியினை மற்றும் உயர்வானதை பயிலுவதற்கு இப் பாடநெறி ஆரம்ப தேசிய தொழிற்தகைமை 4 மட்டம் அடிப்படையாக அமைகின்றது.

04. துறைசார் உதவியாளர் (விவசாயம்) தேசிய தொழிற்தகைமை (NVQ 4) பாடநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடங்கள் பின்வருமாறு :

- M-01 விவசாயத்தின் அடிப்படைகள் (Fundamentals of Agriculture)
- M-02 நெல் மற்றும் பிற தானியப் பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல் (Establishment and Maintenance of Paddy and Other Cereals)
- M-03 மறு வயற் பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல் (Establishment and Maintenance of Other field Crops - OFC)
- M-04 பூங்கனியியல் பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல் ( Establishment and Maintenance of Horticultural Crops)
- M-05 அறுவடை செய்தல் மற்றும் ஆரம்ப பதப்படுத்தல் (Harvesting and Primary Processing)
- M-06 பண்ணை இயந்திரங்கள்,உபகரணங்கள் மற்றும் கருவிகளின் பராமரிப்பு (Maintenance of Farm Machineries, Equipment and Tools)
- M-07 விவசாய விரிவாக்கத் திட்டத்தை அமுல்படுத்தல் (Implementation of Agricultural Extension Programme)
- M-08 பணியிடத்திற்கான தொடர்பாடல் திறன் (Communication Skills for Workplace)
- M-09 மொழி எழுத்தறிவு மற்றும் எண்ணியல் திறன் (Language Literacy and Numeracy)
- M-10 குழு செயற்பாடுகள் (Team Work)
- M-11 தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுதல் (Occupational Health and Sefety Procedures and Practice)

05. 2025 வருடத்திற்கான இரண்டாவது குழுவினர் ஒற்றோபர் மாத இறுதி வாரத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரர் 8 x 12 அங்குல (A4) அளவிலான கடதாசியில் இரண்டு பக்கங்களை உபயோகித்து இங்கு கீழே காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2025.10.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பபட வேண்டும். உங்கள் விண்ணப்பத்தை பதிவுத் தபால் மூலம் அனுப்பும் போது, விண்ணப்பப்படிவம் இடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் " துறைசார் உதவியாளர் (விவசாயம்) NVQ 4 மட்ட பயிற்சிப் பாடநெறி விண்ணப்பம் – 2025 ii " என்று எழுதி அனுப்ப வேண்டும் . ஒழுங்கற்ற தவறான விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவம் அனுப்பவேண்டிய முகவரி – “ ஊவா மாகாண விவசாயப் பணிப்பாளர், ஊவா மாகாண விவசாயத் திணைக்களம், ரத்வத்த மாவத்தை, பதுளை.”

06. கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பப் படிவங்களுக்கு ஏற்ப போட்டிப் பரீட்சை நடாத்துதல் அல்லது நேர்முகப் பரீட்சையை மேற்கொள்ளல் மூலம் பாடநெறிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பான இறுதி முடிவு ஊவா மாகாண விவசாயப் பணிப்பாளருக்கு உரியதாகும்.

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களில் பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்பு எண்ணிக்கையின் இருமடங்கான விண்ணப்பதாரர்கள் தகுதி பரீட்சிப்பு நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டு உயர் தகுதி கொண்ட விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

போட்டிப் பரீட்சை நடாத்துதல் அல்லது நேர்முக பரீட்சை மேற்கொள்ளல் தினம் தொடர்பாக விண்ணப்பதாரர்களுக்கு எழுத்து மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். மேலும் ஊவா மகாண சபை இணையதளத்தில் இது தொடர்பாக அறிந்து கொள்ள முடியும்.

07. இப் பயிற்சி பாடநெறி தொடர்பாக மேலதிக தகவல்களை 055 2265423 என்ற தொலைபேசி மூலம் பிபிலை மாவட்ட விவசாய பயிற்சி நிலைய முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

08. பயிற்சி நெறிக்கு விண்ணபிப்பதற்கான தகைமைகள் :

08.1 கல்வித் தகைமைகள் - கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் (சா./ த.) இரண்டு 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

08.2 பிற தகைமைகள் :

I. எல்லா விண்ணப்பதாரிகளும் விண்ணப்பம் கோரப்படும் தினத்தில் 18 தொடக்கம் 40 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

II. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்திற்கு குறைந்தது மூன்று வருடங்கள் ஊவா மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவருக்கு முதலிடம் வழங்கப்படுவதுடன் வெற்றிடம் நிலவும் பட்சத்தில் மாத்திரம் பிற மாகாணத்தின் விண்ணப்பதாரிகள் பயிற்சி நெறிக்காக உள்வாங்கப்படுதல் பற்றி பரிசீலிக்கப்படும். நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்த பிரதேசத்திற்குரிய கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் சமர்பிக்கப்பட வேண்டும்.

09. பயிற்சிப் பாட நெறிக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு :

I. பிபிலை மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் பயிற்சி நடைபெறும் முதல் 06 மாத காலப் பகுதியில் பயிற்சி நடவடிக்கைகளில் பங்கு பற்றும் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூபா ஐந்நூறு (ரூபா. 500.00) பயிற்சி நெறி ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்படும். தொழில்சார் பயிற்சி 6 மாத காலப் பகுதியில் ஊவா மகாண விவசாயத் திணைக்களத்தினால் கொடுப்பனவு செலுத்தப்படமாட்டாது.

10. வேறு விடயங்கள் :

I. இப் பாடநெறிக்கு 25 மாணவர்கள் உள்வாங்கப்படுவார்கள்.

II. பயிற்சியாளர்களும் பயிற்சியின் முடிவில் திரும்ப செலுத்தப்படும் பாதுகாப்பு வைப்புத் தொகையாக ஆயிரம் ரூபா (ரூபா 1,000.00) வைப்புச் செய்யப்பட வேண்டும் . பயிற்சி நெறியை பூரணப்படுத்தாவிடின் வைப்பு தொகை திரும்ப செலுத்தப்படமாட்டாது.

III. ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தினால் தங்குமிட வசதி மற்றும் உணவுப் பாணங்கள் வழங்கப்படமாட்டாது.

IV. பயிற்சியின் பின்னர் வேலை ஒன்றை வழங்க ஊவா மாகாண விவசாயத் திணைக்களம் உட்பட்டிருக்கவில்லை என்பது விஷேடமாக வலியுறுத்தப்படுகின்றது.

V. பயிற்சிப் பாடநெறி நடைபெறும் காலத்தினுள் ஒழுக்கமின்மை மற்றும் சட்டதிட்டங்களுக்கு முரணாக செயற்பட்டால் அங்கத்துவத்தை இரத்துச் செய்வதற்கு அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

11. நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :

I. வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலர் சான்றிதழ்
II. நன்மதிப்பைப் பெற்ற இரண்டு சான்றிதழ்கள், அவற்றில் ஒன்று நிறைவேற்றுத்தர அரசாங்க உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும்
III. நேர் முகப் பரீட்சையின் போது தேசிய ஆளடையாள அட்டை, கல்விச் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பதிவு செய்தலின் போது நகல் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

11. விண்ணப்பதாரர் பிரயோக விவசாயத்தில் ஈடுபடுவதற்கு, அவர் உடல் நலத்துடன் இருப்பதாகச் சான்றளிக்க, அரசாங்க மருத்துவ அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ் பதிவு செய்தலின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## மாதிரி விண்ணப்பப்படிவம்

ஊவா மாகாண விவசாயத் திணைக்களம் - ஊவா மாகாண சபை

துறைசார் உதவியாளர் (விவசாயம்) பாடநெறி (NVQ 4) - ஊவா மாகாண விவசாயத் திணைக்களம்

1. (i) முழுப்பெயர் (சிங்களத்தில்) : ..........................................

(ii) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..........................................

(iii) முதலெழுத்துடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..........................................

2. பெண்/ ஆண் : ..........................................

3. (i) நிரந்தர முகவரி (சிங்களத்தில்) : ..........................................

(ii) நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..........................................

(iii) தொலைபேசி இல. : இல்லம்: .................................. கையடக்க : ......................................

(iv) மின்னஞ்சல் முகவரி (செயற்பாட்டில் உள்ளவை) : ..........................................

(v) Whatsapp இல. : ..........................................

4. (i) பிறந்த திகதி :-..........................................

(ii) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்துக்கு வயது :
வருடங்கள் :............................ மாதங்கள் :................................ நாட்கள் :..........................................

5. தேசிய ஆளடையாள அட்டை இல. : ..........................................

6. வசிப்பிடம் தொடர்பான தகவல்
(i) வசிப்பிட மாவட்டம் : ..........................................
(ii) பிரதேச செயலகப் பிரிவு : ..........................................
(iii) கிராம அலுவலகப் பிரிவு : ..........................................
(iv) ஊவா மாகாணத்தில் வசிக்கும் காலம் : ..........................................

7. கல்வித் தகைமை :

(i) கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (சாதாரண தர) பரீட்சை :

வருடம் :-………… பரீட்சைச் சுட்டெண் : ………

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

வருடம்:-………… பரீட்சைச் சுட்டெண்: ………

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ii) கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (உயர் தர) பரீட்சை :

வருடம் :-……… பரீட்சைச் சுட்டெண் : …………

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

வருடம்:-…… பரீட்சைச் சுட்டெண்: …………

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(iii) பிற தகைமைகளும் வெளி ரீதியிலான செயற்பாடுகளும் :
……………………………………………………………………………………………………………………………………..
……………………………………………………………………………………………………………………………………..

8. அவசர சந்தர்ப்பத்தில் அறிவிக்கப்பட வேண்டிய நபர்கள் -

(i) பெயர் : …………………………………………………………………………………………………………………………
(ii) விண்ணப்பதாரருக்குள்ள உறவு முறை : ……………………………………………………………………………………..
(iii) முகவரி : ……………………………………………………………………………………………………………………..
(iv) தொலைபேசி இலக்கம்: கையடக்கம் :………………………… இல்லம் :……………………………………………

மேலே கூறப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். ஏதாவதொரு தகவல் பொய்யானதென என்னைத் தெரிவு செய்த பின் வெளியாகினால் எந்தவொரு விசாரணையுமின்றி எனது பயிலுநர் நிலைமை இரத்தாகும் என்பதனையும் அதற்கான விதிக்கப்பட்ட தொகையினை செலுத்துவதற்கு இணங்குகின்றேன் என்பதனையும் நான் அறிவேன்.

திகதி …………………………… ……………………………………
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

10-69

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு. -** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2025**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | - | வெள்ளி | 03.10.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2025 |
| | | வெள்ளி | 10.10.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2025 |
| | | வெள்ளி | 17.10.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 03.10.2025 |
| | | வெள்ளி | 24.10.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2025 |
| | | வெள்ளி | 31.10.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2025 |
| **நவெம்பர்** | - | வெள்ளி | 07.11.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 24.10.2025 |
| | | வெள்ளி | 14.11.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 31.10.2025 |
| | | வெள்ளி | 21.11.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 07.11.2025 |
| | | வெள்ளி | 28.11.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 14.11.2025 |
| **திசெம்பர்** | - | வெள்ளி | 05.12.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 21.11.2025 |
| | | வெள்ளி | 12.12.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 28.11.2025 |
| | | வெள்ளி | 19.12.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 05.12.2025 |
| | | வெள்ளி | 26.12.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 12.12.2025 |

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.